சார்பு நீதிமன்றம், விருதுநகர்

O.S.No: 109/2022 Date: 09.06.2025

வாதி தரப்பு சாட்சி–2(Pw2) ன் வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திருமதி.K.சேர்மக்கனி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சீனிசெல்வம் | சாதி | : | –– |
| த/பெ | : | ராமமூர்த்தி | சமயம் | : | –– |
| கிராமம் | : | விருதுநகர் | தொழில் | : | |
| தாலுகா | : | விருதுநகர் | வயது | : | 38 |

முதல் விசாரணை–

நான் விருதுநகர் மாவட்டம், சிவகாசி தாலுகாவில் துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு வட்டாட்சியர் அளித்த அதிகார கடிதம் கொண்டு வந்துள்ளேன். அதிகார கடிதம் **சா.சா.ஆ.1.** அழைப்பாணையில் ஒன்பது ஆவணங்கள் கொண்டுவரச்சொல்லி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களில் 6 ஆவணங்கள் மட்டும் எங்கள் அலுவலக கோப்பில் இருந்தது. அதை கொண்டு வந்துள்ளேன். ஈஞ்சார் கிராமம் சர்வே எண்.964/2 அடங்கல் பதிவேடு தாக்கல் செய்துள்ளேன். அது **சா.சா.ஆ.2**. மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் 7 ஏக்கர் 64 செண்ட் உட்பிரிவு செய்யப்பட்டதற்கான ஆவணம் தாக்கல் செய்கிறேன். அது **சா.சா.ஆ.3** ஆகும். மேற்படி சர்வே எண்.964/2ஏ2 முருகானந்தம் என்பவரின் பெயரில் தாக்கலாகி உள்ளது. மேற்படி சர்வே

எண்.964/2 ஏ 1டி சிங்கத்துரை என்பவரின் பெயரில் தாக்கலாகி உள்ளது. சர்வே எண்.964/2ன் வரைபடம் **சா.சா.ஆ.4**. சர்வே எண்.964/2ன் A Register **சா.சா.ஆ.5**. சர்வே எண்.964/2 ஏ 3 ஆனது ராவனேஸ்வரன் பெயரில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 39 செண்ட்(0.56.5 ஏர்ஸ்.). அதன் சிவகாசி கிராம பட்டா எண்.1164. அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள 7 முதல் 9 ஆவணங்கள் எங்கள் அலுவலக கோப்புகளில் இல்லை. சர்வே எண்.964/2 ஏ 3 எதன் அடிப்படையில் ராவனேஸ்வரன் என்பவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதற்கான ஆவணங்கள் எங்கள் அலுவலக கோப்புகளில் இல்லை. பட்டா பெயர் மாற்றம் சம்மந்தமாக தரப்பினர்களிடம் விசாரணை செய்யப்பட்டது சம்மந்தமான ஆவணங்கள் எங்கள் அலுவலக கோப்புகளில் இல்லை. பொதுவாக பட்டா மாற்றம் செய்வதற்கு முந்தைய ஆவணங்களை பரிசீலனை செய்து தான் பட்டா வழங்குவோம் என்றால் சரிதான். சர்வே எண்.964/2 ஆனது வாதிகளின் முன்பாத்தியஸ்தர்களான முருகானந்தம், சிங்கத்துரை மற்றும் தங்கையாதேவர் அவரது மனைவி கிருஷ்ணம்மாள் ஆகியோர் பெயர்களில் பத்திரங்கள் தாக்கலாகி உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவின் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவில் ஆட்சேபனை இருந்தால் சிவில் நீதிமன்றத்தின் மூலம் தீர்வு காணலாம் என்றால் சரிதான். ராவனேஸ்வரன் பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு முன்பு செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை பரிசீலனை செய்வது வழக்கமாக என்றால் இல்லை. செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் ராவனேஸ்வரன் மற்றும் அவரது முன்னோர்கள் பெயரோ குறிப்பிடவில்லை

என்றால் சரிதான், செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் சர்வே எண்.964/2 ஆனது கோபால்சாமி மற்றும் ராமசாமி ஆகியோர்கள் பெயரில் தாக்கலாகி உள்ளது. ஆவணங்களை சரிவர பரிசீலனை செய்யாமல் சர்வே எண். 964/2 ஆனது ராவனேஸ்வரன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும், அது ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் சொன்னால் அது பற்றி நான் கருத்து கூறமுடியாது. நீதிமன்றம் அது சம்மந்தமாக உத்தரவிட்டால் அதை ஏற்றுக்கொள்ள தயார். இந்த வழக்கின் 6ம் பிரதிவாதியான சிவகாசி வட்டாட்சியர் தரப்பினராக சேர்க்கப்பட்டு, அழைப்பாணையை பெற்றும் ஆஜராகாமல் இருப்பதற்கு தனிப்பட்ட காரணங்கள் உள்ளதா என்றால் இல்லை. எங்கள் அலுவலகத்தில் சரிவர விசாரணை செய்யாமல் பட்டா எண்.1164 ராவணேஸ்வரன் என்பவர் பெயரில் தவறுதலாக வழங்கப்பட்டுள்ளதால் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு அவசியம் ஏற்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவின் அடிப்படையில் விசாரணை செய்ததில் தாவா சொத்தில் பிரதிவாதிகள் அனுபவத்தில் இருந்ததால் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் ஆவணங்கள் மற்றும் விசாரணையின் அடிப்படையில் வழங்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் தாசில்தார் மற்றும் கிராம நிர்வாக அலுவலரை விசாரித்து உத்தரவு பிறப்பிப்பார் என்றால் சரிதான், கிராம நிர்வாக அலுவலரை விசாரித்தும், தாசில்தாரிடம் அறிக்கை பெற்றும் உத்தரவிடுவார். தற்போது சர்வே எண்.964/2ஏ3 ஆனது ராவனேஸ்வரன் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக ராவனேஸ்வரன் பெயரில்

பட்டா உள்ளது என்றால் 1985 முதல் ராவனேஸ்வரன் மற்றும் இருவர் பெயரில் கூட்டுப்பட்டா ஏற்பட்டு உள்ளது. கடந்த 2021ல் இருந்து ராவனேஸ்வரன் பெயரில் தனிப்பட்டாவாகி உள்ளது. சட்ட நிர்ணய காலத்திற்கு மேலாகவே ராவனேஸ்வரன் என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் 2021ல் இருந்து அவரது பெயரில் உள்ளது.